கொளத்தூரில் நடந்த விழாவில் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு 3,200 முஸ்லிம் சகோதரிகளுக்கு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இசை நீரூற்று, யோகா மையம் உள்ளிட்ட வசதிகள்

கொளத்தூர் தொகுதியில் ரூ. 28 கோடியில் முரசொலி மாறன் பூங்கா; ரூ.12 கோடியில் மின்னியல், யந்திரவியல் கட்டட கட்டமைப்பு

முதலமைச்சர் ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, மார்ச். 9–

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 28.25 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட முரசொலி மாறன் பூங்கா, (இசை நீரூற்றுடன் அதிநவீன வசதி) கலைஞர் நூற்றாண்டு நாணயம் நினைவுத் தூண், முதல்வர் படைப்பகம், நவீன நூலகம் மற்றும் கொளத்தூர் நவீன அங்காடி ஆகியவற்றையும் திறந்து வைத்தார்.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 4.15 கோடி ரூபாய் செலவிலான புதிய பள்ளிக் கட்டடம், பெண்கள் உடற்பயிற்சிக் கூடம் மற்றும் 2 நியாய விலைக்கடைகளுடன் கூடிய பல்நோக்கு மையக் கட்டடம் ஆகியவற்றையும்,

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள பல்வேறு கழிவுநீர் உந்து நிலையங்களில் 12.48 கோடி ரூபாய் செலவில் மின்னியல், இயந்திரவியல், கட்டட கட்டமைப்புகளை மேம்படுத்தி மற்றும் வலுப்படுத்தப்பட்ட பணிகளையும் திறந்து வைத்தார்.

முதல்வர் படைப்பகம், நவீன நூலகம்

ஜவகர் நகரில் முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகமானது 4,127 சதுர அடி நிலப் பரப்பளவில் 4,831 சதுர அடி கட்டடப் பரப்பளவில் 4.75 கோடி செலவில் தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டுள்ளது.

பேப்பர் மில்ஸ் சாலையில் கொளத்தூர் நவீன அங்காடியானது 31,785 சதுர அடி நிலப்பரப்பளவில் 61,230 சதுர அடி கட்டடப் பரப்பளவில் அடித்தளம் , தரைத்தளம் மற்றும் 2 தளங்களுடன் 19.30 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, ஜவஹர் நகர், 2வது வட்டச் சாலையில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் 49 இலட்சம் ரூபாய் செலவில் 840 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள பெண்கள் உடற்பயிற்சிக் கூடம், ரமணா நகர், கௌதமபுரம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 41 இலட்சம் ரூபாய் செலவில் 990 சதுர அடி பரப்பளவில் இரண்டு நியாய விலைக் கடைகளுடன் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

திரு.வி.க.நகர் மண்டலம், சீனிவாச நகர், 3வது பிரதான சாலையில் 3.25 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய பள்ளிக் கட்டடத்தை திறந்து வைத்து, மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்கினார்.

தீட்டி தோட்டம் 1வது தெருவில் பல்வேறு கழிவுநீர் உந்து நிலையங்களில் 12.48 கோடி ரூபாய் செலவில் மின்னியல், இயந்திரவியல், கட்டட கட்டமைப்புகளை மேம்படுத்தி மற்றும் வலுப்படுத்தப்பட்ட பணிகளையும் முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

நலத்திட்ட உதவிகள்

பல்லவன் சாலையிலுள்ள டான் போஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு 3,200 முஸ்லிம் சகோதர, சகோதரிகளுக்கு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் வழங்கினார்.

அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் Tally பயின்ற, 53 மாணவிகள் மற்றும் 32 மாணவர்களுக்கு மடிக்கணினிகள், சான்றிதழ்களையும், தையல் பயிற்சி முடித்த 320 மகளிர்களுக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் சான்றிதழ்களையும் வழங்கி வாழ்த்தினார்.

கலைஞர் கண் மருத்துவமனையில் கண் பரிசோதனை செய்து கொண்ட 200 நபர்களுக்கு கண் கண்ணாடிகள் மற்றும் புத்தாடைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன் உள்பட பலரும் பங்கேற்றார்கள்.

சென்னை காவல்துறை சார்பில் இணையவழி குற்றத் தடுப்பு விழிப்புணர்வு பேரணி

நடிகர் சந்தானம், கூடுதல் கமிஷனர் கார்த்திகேயன் துவக்கி வைத்தனர்

சென்னை, மார்ச் 9–

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஏ.அருண் வழிகாட்டுதலின்பேரில் இணைய வழி குற்றத் தடுப்பு விழிப்புணர்வுப் பேரணியை போக்குவரத்து (பொறுப்பு) மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையாளர், ஜி.கார்த்திகேயன் தலைமையில், திரைப்பட நடிகர் சந்தானம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு துவக்கி வைத்தார். கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணியில் சுமார் 500 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ மாணவியர் பங்கேற்று, மெரினா கடற்கரை உழைப்பாளர் சிலையிலிருந்து கண்ணகி சிலை வரை நடைபெற்றது.

இப்பேரணியில், இணையவழி குற்ற மோசடி தொடர்பாக எப்போதும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என பொதுமக்களுக்கு வலியுறுத்தப்பட்டது.

மேலும், அவசர உதவி தேவையான நேரங்களில் 1930 என்ற இணைய குற்ற உதவி மைய எண்ணைத் தொடர்புகொண்டு உடனடியாக தகவல் அளிப்பது மிகவும் அவசியமானது என அறிவுறுத்தப்பட்டது. மேலும், இணையவழி குற்றங்கள் தொடர்பான புகார்களை www.cybercrime.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாகவும் பதிவு செய்யலாம் என இப்பேரணியின்போது பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய இணையவழி குற்றத் தடுப்புப் பிரிவு துணை ஆணையாளர் ந.ஸ்ரீநாதா கூறுகையில், கடந்த 01.01.2025 முதல் 28.02.2026 வரை உள்ள கால கட்டத்தில்,

சென்னை பெருநகர காவல்துறையில் 3,692 இணையவழி குற்றம் சார்ந்த புகார்கள் பெறப்பட்டுள்ளது எனவும், 208 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அவ்வழக்குகளில் சம்மந்தப்பட்ட இணையவழிகுற்றவாளிகள் 164 நபர்கள் கைது செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், இக்காலகட்டத்தில் இணையவழி குற்றங்களில் பாதிக்கப்பட்ட நபர்கள் ரூ.365 கோடி பணத்தை இழந்துள்ளனர் எனவும், சென்னை பெருநகர காவல்துறை சார்பாக காவல் ஆணையாளர் வழிகாட்டுதலின்படி, சீரிய நடவடிக்கை மேற்கொண்டு பணம் ரூ.38.3 கோடி எதிரிகளிடமிருந்து மீட்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களின் வங்கிக் கணக்கிற்கு நீதிமன்ற உத்தரவுப்படி அனுப்பப்பட்டது எனவும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய குற்றப்பிரிவு காவல் துணை ஆணையாளர் விவி. கீதாஞ்சலி மற்றும் காவல் அதிகாரிகள் இப்பேரணியில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பெயர் மாற்றம்

GAYATHRI KANNIYAPPA SABANAYANAKAM, க/பெ:SANKARA NARAYANAN, பிறந்த தேதி: 07/06/1996, எண்.36A, N.NO.28/1, SESHADHRI PALAYAM STREET, காஞ்சிபுரம் - 631501 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி GAYATHRI KANNIAPPAN SABANAYAKAM த/பெ: SABANAYAKAM KANNIAPPAN என்று அழைக்கப்படுகிறேன்.

GAYATHRI KANNIYAPPA SABANAYANAKAM

மேன்மைமிகு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் சமூகம், விழுப்புரம்

தனகோடி, S/O.சண்முகம்
இளையான்டிபட்டி கிராமம், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

அறிவிப்பு

தனகோடி., S/O.சண்முகம் என்ற நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். எனது தாயார் சீத்தாலட்சுமி க/பெ.சண்முகம் என்பவர் கடந்த 16/2/2010 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை அப்பொழுது இறப்பு பதிவு செய்யப்படாததால் தற்போது அவருடைய இறப்பு சான்றிதழ்கோரி விழுப்புரம்வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார்.மேற்படி மனுவில் யாருக்காவது ஆட்சேபனை இருப்பின் தங்களுடைய ஆட்சேபனையை விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிடையாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. இல்லையெனில் மேற்படி மனு ஒருதலைப்பட்சமாக முடிவு செய்யப்பட்டுவிடும் என்பதை அறியவும்.

தனகோடி
மனுதாரர்

மேன்மைமிகு வானூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அவர்கள் சமூகம்
I.A. No. 161/2022 in
O.S. No. 94/2011

புதுச்சேரி, நெ. 20, காமராஜர் வீதியில் வசிக்கும் தங்கவேல் குமாரர் சந்நியாசி (இறந்தார்), மேற்படி முகவரியில் வசிக்கும் லேட். சந்நியாசி மனைவி சரோஜா மற்றும் பலர்

... மனுதாரர்கள்/வாதிகள்

எதிர்

புதுச்சேரி, முத்தியால்பேட்டை, வி.ஓ.சி. நகர், அன்னை பெசன்ட் நகர், நெ. 40ல் வசிக்கும் ராஜன் நாயர் குமாரர் போஸ்

... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

எதிர்மனுதாரர்/பிரதிவாதி
அறிவதாவது

இந்த நெம்பர் மனுதாரர், எதிர்மனுதாரர் மீது I.A. No. 161/2022 என்ற நெம்பரில் ஆர்டர் 9 ரூல் 9 மனு தாக்கல் செய்து, மேற்படி மனுவில் எதிர்மனுதாரர் ஆகிய தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக வாய்தா 30.03.2026ல் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி தேதியன்று சமூகம் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரராகிய ஆகிய தாங்கள் காலை 10.00 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் மேற்படி வழக்கில் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன்மூலம் அறியவும்.

A.கருணாமூர்த்தி B.A., B.L.,
வழக்கறிஞர், புதுச்சேரி.

பெயர் மாற்றம்

நான் J.CHITRA, தந்தை பெயர்: B.Jothiramalingam, மற்றும் கணவர் பெயர்: K.Ravikumar பிறந்த தேதி: 14/04/1976, கதவு எண்.68, இரணியன் தெரு 1, ஸ்ரீ ராஜகணபதி நகர், ரங்கம்பாளையம், ஈரோடு 638009, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி CHITHIRA.R என்று அழைக்கப்படுகிறேன்.

J.CHITRA

IN THE HON'BLE XXII ASSISTANT CITY CIVIL COURT AT MADRAS
O.S.No.6611 OF 2025

V.Pazhanivel,
S/o Viswananthan ... **Plaintiff**

Vs

1. M.Pramila
2. M.Barath
3. Basker ... **Defendants**

To
1. M.Pramila
Door No.508, Eagantha Apartment, Kannigapuram, Chennai - 600012.
2. M.Barath
Door No.501, Eagantha Apartment, Kannigapuram, Chennai - 600012.
3. Basker
Door No.501, Eagantha Apartment, Kannigapuram, Chennai - 600012.
Also at
No.24/19, Vellala Street, Kodambakkam, Chennai 600024

Please take notice that my Client V.Pazhanivel has filed the above suit for recovery of money which was loaned by my client to the Defendants herein. The said suit came up for hearing on 03.03.2026 and the Hon'ble Court was pleased to order notice returnable by 24.03.2026. Make it convenient to appear before the Hon'ble XXII Assistant City Court, Chennai, in person, or through pleader, on 24.03.2026 at 10.30 A.M. or soon thereafter as may be heard, failing which the matter will be decided Ex-parte.

R.NAVEEN SRINIVASAN
Counsel for Plaintiff

மேன்மைமிகு திண்டிவனம் கூடுதல் சார்பு நீதிமன்றம் அவர்கள் சமூகம்
O.S. No. 8/2026

வானூர் வட்டம், காரட்டை கிராமத்தில் வசிக்கும் வீரமுத்து கவுண்டர் குமாரர் சங்கரதாஸ் ... வாதி

எதிர்

வானூர் வட்டம், காரட்டை கிராமத்தில் வசிக்கும் காலஞ்சென்ற வீரமுத்து கவுண்டர் குமாரர்கள் சரவணன் (D2), முத்து விநாயகம் (D4)

... 2,4 பிரதிவாதிகள்

2,4 பிரதிவாதிகள் அறிவதாவது

இந்த நெம்பர் வாதி, பிரதிவாதிகள் மீது பாக வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் 2,4 பிரதிவாதிகள் ஆகிய தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக வாய்தா 23.03.2026ல் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி தேதியன்று சமூகம் நீதிமன்றத்தில் 2,4 பிரதிவாதிகள் ஆகிய தாங்கள் காலை 10.00 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் மேற்படி வழக்கில் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன்மூலம் அறியவும்.

V.ஜெயச்சந்திரன் B.A., B.L.,
S.அய்யனார் B.A., B.L.,
வழக்கறிஞர்கள், திண்டிவனம்.

மேன்மைமிகு விழுப்புரம் முதன்மை சார்பு நீதிமன்ற கோர்ட்டார் அவர்கள் சமூகம்
I.A 439 / 2014 in. I.A. 1052/2019
in OS 306/2014

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம். நிறையூர் கிராமத்தைச் சேர்ந்த ராமச்சந்திரன், குமாரர் காங்கேயன்

– மனுதாதர் / வாதி

எதிர்

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம , ஆதனூர் கிராமம், 1/27, மாரியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் காலம் சென்ற எம். சாந்தி – காலஞ்சென்ற 1ம் பிரதிவாதியின் மனைவி
M.சாந்தி 3.
2. காலஞ்சென்ற 1ம் பிரதிவாதியின் மகள் M.கலைவாணி 4.
3.காலஞ்சென்ற 1ம் பிரதிவாதியின் மகள் M.திலகவதி – 5
4.காலஞ்சென்ற 1ம் பிரதிவாதியின் மகன் M.ஹரி – 6.

மேற்படி நெம்பரில் 3 முதல் 6 வரை எதிர் மனுதாதர்களுக்கு தெரிவிப்பதாவது.

மேற்படி நெம்பரில் வாதி / மனுதாதர் தரப்பில் இறந்த 1ம் பிரதிவாதிக்கு வாரிசுகள் சேர்க்க மனுதாக்கல் செய்யப்பட்டு, அந்த மனு ஐ.ஏ.எண்.439/2024 என பதிவு செய்யப்பட்டுள்ளது. மேல்ப்படி மனுவின் மீது 3 முதல் 6 வரை எதிர் மனுதாதர்கள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராக பொருந்து, வாய்தா 27.03.2024 அன்று வைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தேதியில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி, தங்களுடைய ஆட்சேபனைகளைத் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால், தாங்கள் இல்லாதபட்சத்தில் இந்த மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

பி.அன்பழகன்
வழக்கறிஞர், விழுப்புரம்.

OrchidPharma
— A Dhanuka Group Company —

ஆர்க்கிட் பார்மா லிமிடெட்

பதிவு அலுவலகம்: மனை எண்கள். 121 —128, 128A— 133, 138 —151, 159 —164, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஆலத்தூர், செங்கல்பட்டு மாவட்டம் 603110, தமிழ்நாடு, இந்தியா Ph.+91-44-27444471/72/73, Email id: cs@orchidpharma.com, investorrelations@orchidpharma.com Website: www.orchidpharma.com

காகித வடிவிலான பங்கு பத்திரங்களை மாற்றுவதற்கும் மற்றும் மின்னணு வடிவத்திற்கு மாற்றுவதற்கான கோரிக்கையை மீண்டும் சமர்ப்பிப்பதற்கான பங்குதாரர்களுக்கான சிறப்பு சாளரம்

SEBI சுற்றறிக்கை எண். SEBI/HO/MIRSD/MIRSD–PoD/P/CIR/2025/97 தேதி ஜூலை 02, 2025 மற்றும் சுற்றறிக்கை எண் SEBI/HO/38/13/11(2)2026–MIRSD–POD/I/3750/2026 தேதி ஜனவரி 30, 2026 ஆகியவற்றின்படி, முதலீட்டாளர்களின் முதலீட்டு வசதியை எளிதாக்குவதற்காகவும், அவர்கள் வாங்கிய பத்திரங்களில் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் சிறப்பு சாளரம் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 01, 2019 என்ற காலக்கெடுவிற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டு, ஆவணங்கள் அல்லது நடைமுறைகளில் உள்ள குறைபாடுகள் அல்லது பிற காரணங்களால் நிறுவனத்தால் நிராகரிக்கப்பட்ட, திருப்பி அனுப்பப்பட்ட அல்லது கவனிக்கப்படாத காகித வடிவிலான பங்குகளின் மாற்றம் மற்றும் மின்னணு வடிவ மாற்றத்திற்கான கோரிக்கைகளை மீண்டும் சமர்ப்பிக்க இந்த நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.பங்குதாரர்கள் பிப்ரவரி 05, 2026 முதல் பிப்ரவரி 04, 2027 வரையிலான நீட்டிக்கப்பட்ட ஓராண்டு காலத்திற்கு காகித வடிவிலான பங்குகளை மாற்றுவதற்கும் டிமேட் செய்வதற்கும் கோரிக்கைகளை மீண்டும் சமர்ப்பிக்கலாம். இந்தக் காலகட்டத்தில், காகித முறையில் மாற்றுவதற்காக மீண்டும் சமர்ப்பிக்கப்படும் பத்திரங்கள் (இன்று வரை பட்டியலிடப்பட்ட நிறுவனம்/RTA–விடம் நிலுவையில் உள்ள கோரிக்கைகள் உட்பட) டிமேட் முறையில் மட்டுமே வழங்கப்படும்.

அதன்படி, அத்தகைய பங்குதாரர்கள் மேற்கண்ட தேவையான தகவல்கள் மற்றும் ஆவணங்களை நிறுவனத்தின் RTA–விடம் (பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர்) விரைவில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதற்கான தொடர்புடைய ஆவணங்களை நிறுவனத்தின் இணையதளத்தில் "முதலீட்டாளர் ஆவணங்கள்" என்ற தலைப்பின் கீழ் https://www.orchidpharma.com/invr_corporategovernance.html என்ற இணைப்பில் அணுகலாம்.

ஆர்க்கிட் பார்மா லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
கபில் தயா

தேதி : 09.03.2026 — கம்பெனி செயலாளர் மற்றும் இணக்க அதிகாரி

படிவம் B
பொது அறிவிப்பு

(நொடித்தல் மற்றும் இந்திய திவால் நிலை வாரியத்தின் (கலைப்பு நடைமுறைகள்) விதிமுறைகள் 2016-ன், விதி 12- ன் கீழ்)

M/s. ஆர்கேகேஆர் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் பங்குதாரர்கள் கவனத்திற்கு

வ. எண்	தகவல்கள்	விவரங்கள்
1.	கார்ப்பரேட் கடனாளர் பெயர்	M/s. ஆர்கேகேஆர் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட்
2.	கார்ப்பரேட் கடனாளர் துவக்கத் தேதி	ஜூன் 23, 1989
3.	எந்த அதிகாரத்தின் கீழ் கார்ப்பரேட் கடனாளர் துவக்கம்/பதிவு	நிறுவனங்கள் பதிவாளர், சென்னை
4.	கார்ப்பரேட் கடனாளரின் நிறுவன அடையாள எண் / வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண்	CIN: U2710TN1989PTC017583
5.	கார்ப்பரேட் கடனாளரின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக (வேறு ஏதேனும் இருப்பின்) முகவரி	பதிவு அலுவலகம்: எண். 6/13, பார்க் அவென்யூ, நார்த் அவென்யூ, கேசவபெருமாள்புரம், கிரீன்வேஸ் சாலை அருகில், சென்னை – 600 028.
6.	திவால் தீர்மான நடைமுறை மூடும் தேதி	மார்ச் 2, 2026 (கலைப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி)
7.	கார்ப்பரேட் கடனாளரின் கலைப்பு துவங்கும் தேதி	மார்ச் 2, 2026 (உத்தரவின் நகல் NCLT இணையதளத்தில் மார்ச் 06, 2026 அன்று பதிவேற்றப்பட்டது)
8.	கலைப்பு அலுவலராக செயல்படும் திவால் தீர்மான நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண்	P. பாலசுப்பிரமணியன் IBBI/IPA–001/IP–P–02867/2024–2025/14404
9.	குழுவில் பதிவு செய்துள்ளபடி கலைப்பு அலுவலரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	முகவரி: 85/3, சுக்கலியூர், கருப்பம்பாளையம் கிராமம், கரூர், தமிழ்நாடு – 639003, மின்னஞ்சல்: karurbalaw@gmail.com
10.	தொடர்புக்கான கலைப்பு அலுவலரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	முகவரி: கதவு எண். 3 மற்றும் 4, 157e தரை தளம், மகாத்மா காந்தி சாலை, பாரதி நகர், கரூர் – 639002 | மின்னஞ்சல் : cirp.rkkr@gmail.com
11.	கோரிக்கைகள் சமர்ப்பிக்கும் கடைசி தேதி	ஏப்ரல் 05, 2026 (அதாவது, NCLT இணையதளத்தில் உத்தரவு பதிவேற்றம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்கள்)

இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு, நீதிமன்றம்–II ஆனது, CP(IB)/30(CHE)2023–தொடர்பான IA(IBC)(LIQ.)/29(CHE)2025 வழக்கில் 02 மார்ச் 2026 தேதியிட்ட உத்தரவின்படி M/s. ஆர்கேகேஆர் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட்டை கலைப்பதற்கான நடவடிக்கைகளைத் தொடங்க உத்தரவிட்டுள்ளது. M/s. ஆர்கேகேஆர் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள், வரிசை எண் 10–ல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள கலைப்பாளரிடம், 05 ஏப்ரல் 2026 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ (அதாவது, NCLT இணையதளத்தில் உத்தரவு பதிவேற்றம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்) தங்களது உரிமைகோரல்களுக்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்குமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் தங்களது உரிமைகோரல்களை ஆதாரத்துடன் மின்னணு முறையில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். மற்ற அனைத்து கடன் வழங்கியவர்களும் தங்களது உரிமைகோரல்களை ஆதாரத்துடன் நேரில், தபால் மூலமாக அல்லது மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம்.

தவறான அல்லது தவறாக வழிநடத்தும் உரிமைகோரல் ஆதாரங்களைச் சமர்ப்பிப்பது அபராதங்களுக்கு உள்ளாக்கும்.

இந்த நிறுவனக் கலைப்பு நடவடிக்கையின் போது ஒரு பங்குதாரர் தனது உரிமைகோரல்களைச் சமர்ப்பிக்கத் தவறினால், நொடித்தல் மற்றும் இந்திய திவால்நிலை வாரியத்தின் (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால் தீர்வு செயல்முறை) விதிமுறைகள், 2016–ன் கீழ் பெருநிறுவன திவால் தீர்வு செயல்முறையின்போது அத்தகைய பங்குதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட உரிமைகோரல்கள் பிரிவு 38–ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

ஒப்பம்/– P. பாலசுப்பிரமணியன்
கலைப்பாளர், M/s. ஆர்கேகேஆர் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட்
தேதி: 09 மார்ச் 2026, இடம்: கரூர் — பதிவு எண்: IBBI/IPA–001/IP–P–02867/2024–2025/14404

படிவம் B
பொது அறிவிப்பு

(நொடித்தல் மற்றும் இந்திய திவால் நிலை வாரியத்தின் (கலைப்பு நடைமுறைகள்) விதிமுறைகள் 2016-ன், விதி 12- ன் கீழ்)

M/s. குக்னானி லீசிங் & ஹையர் பர்சேஸ் பிரைவேட் லிமிடெட் பங்குதாரர்கள் கவனத்திற்கு

வ. எண்	தகவல்கள்	விவரங்கள்
1.	கார்ப்பரேட் கடனாளர் பெயர்	M/s. குக்னானி லீசிங் & ஹையர் பர்சேஸ் பிரைவேட் லிமிடெட்
2.	கார்ப்பரேட் கடனாளர் துவக்கத் தேதி	ஜூன் 06, 1997
3.	எந்த அதிகாரத்தின் கீழ் கார்ப்பரேட் கடனாளர் துவக்கம்/பதிவு	நிறுவனங்கள் பதிவாளர், சென்னை
4.	கார்ப்பரேட் கடனாளரின் நிறுவன அடையாள எண் / வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண்	CIN: U65921TN1997PTC089841
5.	கார்ப்பரேட் கடனாளரின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக (வேறு ஏதேனும் இருப்பின்) முகவரி	பதிவு அலுவலகம்: எண். 6/13, பார்க் அவென்யூ, நார்த் அவென்யூ, கேசவபெருமாள்புரம், கிரீன்வேஸ் சாலை அருகில், சென்னை – 600 028.
6.	திவால் தீர்மான நடைமுறை மூடும் தேதி	மார்ச் 2, 2026 (கலைப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி)
7.	கார்ப்பரேட் கடனாளரின் கலைப்பு துவங்கும் தேதி	மார்ச் 2, 2026 (உத்தரவின் நகல் NCLT இணையதளத்தில் மார்ச் 06, 2026 அன்று பதிவேற்றப்பட்டது)
8.	கலைப்பு அலுவலராக செயல்படும் திவால் தீர்மான நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண்	P. பாலசுப்பிரமணியன் IBBI/IPA–001/IP–P–02867/2024–2025/14404
9.	குழுவில் பதிவு செய்துள்ளபடி கலைப்பு அலுவலரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	முகவரி: 85/3, சுக்கலியூர், கருப்பம்பாளையம் கிராமம், கரூர், தமிழ்நாடு – 639003, மின்னஞ்சல்: karurbalaw@gmail.com
10.	தொடர்புக்கான கலைப்பு அலுவலரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	முகவரி: கதவு எண். 3 மற்றும் 4, 157e தரை தளம், மகாத்மா காந்தி சாலை, பாரதி நகர், கரூர் – 639002 | மின்னஞ்சல்: cirp.gugnani@gmail.com
11.	கோரிக்கைகள் சமர்ப்பிக்கும் கடைசி தேதி	ஏப்ரல் 05, 2026 (அதாவது, NCLT இணையதளத்தில் உத்தரவு பதிவேற்றம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்கள்)

இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு, நீதிமன்றம்–II ஆனது, CP(IB)/152(CHE)2023–தொடர்பான IA(IBC)(LIQ.)/28(CHE)2025 வழக்கில் 02 மார்ச் 2026 தேதியிட்ட உத்தரவின்படி M/s. குக்னானி லீசிங் & ஹையர் பர்சேஸ் பிரைவேட் லிமிடெட்டை கலைப்பதற்கான நடவடிக்கைகளைத் தொடங்க உத்தரவிட்டுள்ளது. M/s. குக்னானி லீசிங் & ஹையர் பர்சேஸ் பிரைவேட் லிமிடெட்டின் சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள், வரிசை எண் 10–ல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள கலைப்பாளரிடம், 05 ஏப்ரல் 2026 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ (அதாவது, NCLT இணையதளத்தில் உத்தரவு பதிவேற்றம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்) தங்களது உரிமைகோரல்களுக்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்குமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் தங்களது உரிமைகோரல்களை ஆதாரத்துடன் மின்னணு முறையில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். மற்ற அனைத்து கடன் வழங்கியவர்களும் தங்களது உரிமைகோரல்களை ஆதாரத்துடன் நேரில், தபால் மூலமாக அல்லது மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம்.

தவறான அல்லது தவறாக வழிநடத்தும் உரிமைகோரல் ஆதாரங்களைச் சமர்ப்பிப்பது அபராதங்களுக்கு உள்ளாக்கும்.

இந்த நிறுவனக் கலைப்பு நடவடிக்கையின் போது ஒரு பங்குதாரர் தனது உரிமைகோரல்களைச் சமர்ப்பிக்கத் தவறினால், நொடித்தல் மற்றும் இந்திய திவால்நிலை வாரியத்தின் (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால் தீர்வு செயல்முறை) விதிமுறைகள், 2016–ன் கீழ் பெருநிறுவன திவால் தீர்வு செயல்முறையின்போது அத்தகைய பங்குதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட உரிமைகோரல்கள் பிரிவு 38–ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

ஒப்பம்/– P. பாலசுப்பிரமணியன்
கலைப்பாளர், M/s. குக்னானி லீசிங் & ஹையர் பர்சேஸ் பிரைவேட் லிமிடெட்
தேதி: 09 மார்ச் 2026, இடம்: கரூர் — பதிவு எண்: IBBI/IPA–001/IP–P–02867/2024–2025/14404

வளசரவாக்கம் எஸ்.வி.எஸ் நகர் முதல் பிரதான சாலையில்

மீட்டெடுத்த குளம் ரூ.5 கோடியில் மறுசீரமைப்பு: உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, மார்ச். 9–

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வளசரவாக்கம் எஸ்.வி.எஸ் நகர் முதல் பிரதான சாலையில் மீட்டெடுக்கப்பட்ட குளத்தை 4.88 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைப்பு செய்து புதியதாக உருவாக்கப்பட்டுள்ள "கலைஞர் நூற்றாண்டு நடைபாதை பூங்கா"வை திறந்து வைத்து பார்வையிட்டார்.

தொடர்ந்து மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சின்ன போரூர் மருத்துவமனை சாலையில் 2.71 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நமக்குநாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள புதிய நவீன கலைஞர் நூற்றாண்டு நூலக கட்டடம் மற்றும் மகளிர் திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் ஆகியவற்றைத் திறந்து வைத்து பார்வையிட்டு, வாசகர்களுடன் கலந்துரையாடினார்.

மேலும் மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சின்ன நொளம்பூரில் பூந்தமல்லி நெடுஞ்சாலை மற்றும் யூனியன் சாலைகளை இணைக்கும் வகையில் 135.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 245 மீட்டர் நீளத்தில் நான்கு வழி பாதையுடன் கட்டப்பட்ட புதிய பாலத்தை திறந்து வைத்து, நடந்து சென்று பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் 12.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நொளம்பூரில் கூவம் ஆற்றங்கரையில் ஓம்சக்தி நகர் புதிய பாலம் முதல் நொளம்பூர் யூனியன் சாலை மயானபூமி வரையிலான 890 மீட்டர் நீளத்திற்கு தடுப்பு சுவர் அமைக்கும் பணி மற்றும் அடையாளம்பட்டு சர்வீஸ் சாலை முதல் நொளம்பூர் சாணக்கிய பிரதான சாலை சந்திப்பு வரையிலான 1,200 மீட்டர் நீளத்திற்கு சாலை அகலப்படுத்தும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சிகளில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், டி.ஆர்.பாலு எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் க.கணபதி, ஏ. எம்.வி.பிரபாகர ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, அதாப் ரசூல், மாமன்ற உறுப்பினர்கள் க. ஹேமலதா, ச. பாரதி, மா. ரமணி, ஏ.ஸ்டாலின், ச.சங்கர் கணேஷ், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

ஏப்ரல் 1–ந்தேதி முதல் கிரெடிட் கார்டு விதிகளில் மாற்றம்

சென்னை, மார்ச் 9–

வரும் ஏப்ரல் 1ம் தேதி முதல் கிரெடிட் கார்டு விதிகளில் சில முக்கிய மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன.

அதன் விவரங்கள் வருமாறு:–

இனி கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பிக்கும்போது பான் அட்டை கட்டாயம். பான் அட்டை இல்லாமல் வங்கிகள் விண்ணப்பங்களை ஏற்க மாட்டார்கள். இதனால் செலவுகள் வரி அமைப்புடன் இணைக்கப்படும். போலி கணக்குகள் மற்றும் தவறான பயன்பாடு குறையும்.

மேலும், ஒரு நிதியாண்டில் கிரெடிட் கார்டு மூலம் ரூ.10 லட்சம் அல்லது அதற்கு மேல் ரொக்கமற்ற செலவுகள் செய்தால், அந்த விவரங்களை வங்கி வருமான வரித்துறைக்கு தெரிவிக்க வேண்டும். அதேபோல், ரூ.1 லட்சம் அல்லது அதற்கு மேல் ரொக்கப் பரிவர்த்தனை செய்தாலும் அது கண்காணிக்கப்படும். அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகள் அனைத்தும் பதிவு செய்யப்படும்.

இனி கிரெடிட் கார்டு மூலம் வருமான வரியும் செலுத்த முடியும். இது வசதியாக இருந்தாலும், செயலாக்கக் கட்டணம் மற்றும் வட்டி விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. எனவே கவனமாக பயன்படுத்த வேண்டும்.

நிறுவனங்கள் ஊழியர்களுக்கு வழங்கும் கிரெடிட் கார்டுகளையும் கவனமாக கையாள வேண்டியிருக்கும். அந்த அட்டை தனிப்பட்ட செலவுக்கு பயன்படுத்தப்பட்டால், அந்த தொகை ஊழியரின் வருமானமாகக் கருதப்படலாம். அதற்கு வரியும் விதிக்கப்படலாம். எனவே, அலுவலக செலவுகள் மற்றும் தனிப்பட்ட செலவுகள் தெளிவாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

கடந்த 3 மாதங்களுக்குள் வழங்கப் பட்ட கிரெடிட் கார்டு அறிக்கையை பான் கார்டு விண்ணப்பத்திற்கான செல்லுபடியாகும் முகவரிச் சான்றாக வழங்கலாம். இது கூடுதல் ஆவணங்களுக்கான தேவையைக் குறைப்பதன் மூலம் பான் விண்ணப்ப செயல்முறையை எளிதாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.